செ.வெ.எண்: 53 நாள்:23.09.2016

# புதுக்கோட்டை மாவட்டத்தில் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் வழங்கினார்கள்.

புதுக்கோட்டை நகர்மன்றத்தில் சமூகநலத்துறையின் சார்பில் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் 22.09.2016 அன்று வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் அவர்கள் பயனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் மற்றும் உதவித்தொகையினை வழங்கி பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமூக நலத்தறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி தமிழக அரசு ஏழை எளிய பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு சமூக நலத்துறையின் மூலம் படித்த ஏழைப்பெண்களின் திருமணத்திற்கு 4 கிராம் தாலிக்கு தங்கம் மற்றும் 10, 12 ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூ. 25,000 மற்றும் பட்டம், பட்டயம் படித்த பெண்களுக்கு ரூ.50,000 திருமண நிதி உதவித்தொகை வழங்க உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தை சேர்ந்த 10 மற்றும் 12ம் வகுப்பு முடித்த 61 பெண்களுக்கு தலா ரூ.25000 வீதம் மொத்தம் ரூ.1525000 மதிப்பில் நிதியுதவித்தொகைக்கான காசோலைகளும், தலா 4 கிராம் தாலிக்கு தங்கம் என மொத்தம் 244 கிராம் தங்கம் ரூ.722728 மதிப்பிலும் வழங்கப்பட்டுள்ளது.



புதுக்கோட்டை நகர்மன்றத்தில் சமூகநலத்துறையின் சார்பில் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் ஆகியோர் 22.09.2016 அன்று வழங்கினார்கள். உடன் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம் அவர்கள் மற்றும் பலர் உள்ளனர்

மேலும் பட்டம், பட்டயம் முடித்த 42 பெண்களுக்கு ரூ.50,000 வீதம் ரூ.21,00,000 மதிப்பில் திருமண நிதி உதவித்தொகைக்கான காசோலைகளும், தலா 4 கிராம் தாலிக்கு தங்கம் என மொத்தம் 168 கிராம் தங்கம் ரூ.497616 மதிப்பிலும் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 103 பெண்களுக்கு ரூ.3625000 மதிப்பில் நிதியுதவித்தொகைக்கான காசோலைகளும், ரூ.1220344 மதிப்பில் தாலிக்கு தங்கமும் என ஆகமொத்தம் ரூ.4845344 மதிப்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் ஏழைப்பெண்களின் கஷ்டம் நீக்கப்பட்டுள்ளது. எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தலைவர் திரு.பி.கே.வைரமுத்து அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் பயனாளிகளுக்கு தாலிக்கு தங்கம் மற்றும் உதவித்தொகையினை வழங்கி பேசியதாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சமூக நலத்தறையின் சார்பில் பல்வேறு திட்டங்களை அறிமுகப்படுத்தி செயல்படுத்தி வருகிறார்கள். அதன்படி தமிழக அரசு ஏழை எளிய பொது மக்களின் நலனை கருத்தில் கொண்டு சமூக நலத்துறையின்

மூலம் படித்த ஏழைப்பெண்களின் திருமணத்திற்கு 4 கிராம் தாலிக்கு தங்கம் மற்றும் 10, 12 ஆம் வகுப்பு படித்த பெண்களுக்கு ரூ. 25,000 மற்றும் பட்டம், பட்டயம் படித்த பெண்களுக்கு ரூ.50,000 திருமண நிதி உதவித்தொகை வழங்க உத்தரவிட்டுள்ளது.

..2..



அதனடிப்படையில் நமது மாவட்டத்தை சேர்ந்த 103 பெண்களுக்கு ரூ.4845344/- மதிப்பில் தாலிக்கு தங்கம் மற்றும் நிதியுதவித்தொகைக்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது. மேலும் நமது மாவட்டத்தில் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டத்தின் கீழ் கடந்த 5 ஆண்டுகளிலிருந்து இதுவரை 21498 பயனாளிகளுக்கு 85.992 கிலோ தங்கம் மற்றும் ரூ.714419000/- மதிப்பில் நிதியுதவித்தொகைக்கான காசோலைகளும் வழங்கப்பட்டுள்ளது. எனவே தமிழகஅரசின் இத்தகைய நலத்திட்ட உதவிகளை பெறும் பயனாளிகள் இதனை உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.ஆறுமுகம், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் திரு.வி.சி.ராமையா, நகர்மன்றத்தலைவர் திரு.இரா.ராஜசேகரன், மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி.ரேணுகா, ஒன்றியக்குழுத்தலைவர்கள் திருமதி.வெள்ளையம்மாள்பழனிவேலு, திரு.துரைதனசேகரன், நகர்மன்ற உறுப்பினர் திரு.பாஸ்கர், ஊராட்சி மன்றத்தலைவர் திரு.ராமசாமி, ஆத்மா குழுத்தலைவர் திரு.சாம்பசிவம், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**